THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that even in the Central Jail at Madras, there is no flush-out system for ' C ' Class prisoners?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சிறைச்சாலைகளிலும் இத்திட்டத்தை அமலாக்க ஒரு ஏற்பாடு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது இந்த ஆண்டுகூட ரூ. 2,69,000-க்கு ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. பி. வேலுசாமி: ஐயா, காலம் சென்ற முதல் அமைச்சர் அவர்கள் காலமானதையொட்டி அந்தக் தேதியில் சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு தூக்குத் தண்டனையிலிருந்து விதி விலக்கு அளிக்க உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. என். வரதராஜன் : எல்லாத் தரப்பில் இருப்பவர்களும் கிட்டத் தட்ட தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளை அறிந்தவர்கள் தான். சிறையிலுள்ள " ஸி " வகுப்புக் கைதிகள் படும் துயரங்கள் நமக்குத் தெரியும். பக்கத்து மாநிலங்களில் உழைப்பைக் கொடுக்கும்படியான கைதிகளுக்கு நான்கணா, ஆறணா என்று கூலி நிர்ணயம்செய்து அந்தக் கூலிக்கு உகந்தளவிற்கு வேண்டிய பொருள்களை உள்ளேயே வாங்கிக் கொள்ள வசதிசெய்து சில சீர்திருத்தங்கள் கேரளா போன்ற மற்ற மாநிலங்களில் நடைபெற்றிருக்கின்றன. அதேபோன்ற குறைந்தபட்சச் சீர்திருத்தங்களையா வது இங்கு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது லட்ரீன் பற்றிய கேள்வி. இருந்தாலும் சொல்கிறேன். அதுபோன்று அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : சப்–ஜெயிலில் உள்ள அறைகள் சில நேரங்களில் கக்கூஸாக மாற்றப்படுகிற நிலையில் அங்கு சட்டிகள் மற்றவை எல்லாம் வைத்திருக்கிறார்கள். வெளியே செல்ல வேண்டிய அவசியம் கைதிகளுக்கு ஏற்படும்போது அங்கு பாதுகாப்பிற்காக இருக்கிற காவல் துறையினர் இவர்களை கக்கூஸுக்கு அழைத்துச் செல்கிற ஏற்பாட்டைச் செய்து அறையை அறையாக வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஒரு ஆலோசனைதான்.

ஈரோடு பகுதியில் தொழிலாளர் மருத்துவமனை.

***148 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு பகுதியில் E. S. I. திட்டத்தின்கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் திருப்பூர், உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி, ஈரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்

1969 மார்ச் 3]

இந்த இடங்களில் எல்லாம் மருத்துவ மனைகள் கட்ட வேண்டும் என்று நான் பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு இல்லை என்ற முறையில் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட பொதுவாக இப்படி ஈ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் உள்ள இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட அரசாங்கம் அதிக முயற்சி எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நம் முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கோவையில் ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி திறப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சென்னார்கள். அது கால தாமதமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவில் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்சரிகள் திறக்கப்படுவதற்கான துரித நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனைதான் கட்ட அரசாங்கத்தினிடம் திட்டம் இல்லை என்று சொன்னேன். ஏற்கெனவே உள்ள மருத்துவ மனையில் ஈ.எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோட்டில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் கட்ட ஒப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் வேலைகள் துவங்கப்படும். கோவை பற்றிக் குறிப்பிட்டார்கள். அது விரைவில் தீர்க்கப்படும்.

திரு. ஏ. முனியாண்டி : மதுரையில் தண்டிக்கப்படுகிற கைதிகளை மதுரையில் மத்தியச் சிறைச்சாலை இருந்தும்கூட திருச்சிக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவர்களை மதுரை மத்தியச் சிறைச்சாலையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அடுத்த கேள்விக்குப் போய் விட்டோம்.

திரு. நா. காசிராமன் : ஈரோடு பகுதியில் ஈ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஈ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோடு பகுதியில் எவ்வளவு தொழிலாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள் ? அவர்களுக்கு இந்த மருத்துவ மனை கட்டும் திட்டத்தை விரைவில் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதற்குத் திட்டம் இல்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் கட்ட திட்டமிருக்கிறது. ஒப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

தழை வெட்டிக்கொள்ள அனுமதி

* 34 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் பகுதியிலுள்ள காடுகளில் தழை வெட்டிக் கொள்ள விவசாயிகளுக்குத் கொடுத்துவந்த அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அங்கு தழைகள் வெட்டுவதற்கு இன்னும் தடை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஏறக்குறைய இரண்டாண்டு காலத்தில் காட்டில் விவசாயிகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்